பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ ஐப்பசி மீ 22 உ வியாழக்கிழமை (08 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 19 கதிர்: 246

# வி.பி.சிங் அரசு கவிழ்ந்தது!

# நம்பிக்கை வாக்கில் தோல்வி!!

## ஆதரவாக 142; எதிர்த்து 346 வாக்குகள்

## பிரதமர் நேற்றிரவே இராஜினாமா

புதுடில்லி, நவம்பர் 8

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு தோல்வியுற்றது.

அரசாங்கத்திற்கு ஆதரவாக 142 வாக்குகளும் எதிராக 346 வாக்குகளும் கிடைத்தன. 8பேர் நடுநிலை வகித்தனர்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்றதை அடுத்து வி-பி. சிங் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதம் நேற்று நண்பகல் 11 மணியளவில் மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் ஆரம்பமானது.

விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வி.பி.சிங், தமது அரசு இந்த வாக்கெடுப்பில் தோல்வியுறும் என்பதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் பேசினார்.

'பாரதீய' ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி அயோத்தி நோக்கிமேற் கொண்ட ரதயாத்திரையை அக்டோபர் 27 ஆம் திகதி தடுத்து நிறுத்திய போதே அரசாங்கம் கவிழும் என்பது உறுதியாகிவிட்டது. நாம் அது பற்றிக் கவலைப் படவில்லை. கொள்கையா? பதவியா? - என்ற கேள்வி வரும்போது கொள்கைதான்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் மோதல்; படையினர் ஷெல் தாக்கு!

ஆனையிறவு முகாம் இராணுவத்தினர் நேற்றுக் காலை 5 30 மணியளவில் இயக்கச்சி பக்கமாக வெளியேற முயன்றனர்.

முன்னேறமுயன்ற படையினர் மீது புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதை அடுத்து படையினர் முகாம் திரும்பினர். அங்கிருந்து நாலாபுறமும் கடும் ஷெல் தாக்குதலை நடத்தினர். (ஓ-117)

## காங்கேசன் துறைமுகத்தில் பொருள்களை இறக்கமுயற்சி

காங்கேசன்துறைப் பகுதியை அமைதிப் பிரதேசமாக்கி, அங்குள்ள துறைமுகத்தில் இருந்து கப்பல்களில் உணவுப் பொருள்கள் இறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்க்கவும்-

பெரிய கப்பல்களில் பொருள்களைக் கொண்டு வரவும் - வசதியாகவே காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரச அதிபர் கொழும்பில் இது சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார் என்றும்—

அவர் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பேசு நடத்தி றுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது. (ஓ-3)

## இலங்கை விமானப் படைக்கு மேலும் பொம்மர், ஹெலிகள்

கொழும்பு, நவ. 8

இலங்கை அரசு புதியபொம்மர்கள், ஹெலிக்கொப்டர்களை கொள்முதல் செய்துள்ளது.

இந்த மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் இவை கொழும்பு வந்து சேரும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கத் தயாரிப்பான 212 ரக ஹெலிக்கொப்டர்கள், சியாமார்செட்டி விமானங்கள் (பொம்மர்கள்) ஆகியனவே புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்டவை ஆகும்.

கொள்முதல் செய்யப்பட்டுள்ள விமானங்களின் எண்ணிக்கையை பாதுகாப்புக் கருதி வெளியிட பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்து விட்டன.

சுமார் ஒரு டசின் ஹெலிக்கொப்டர்கள் வரை கொள்முதல் செய்யப்படலாம் என கொழும்பு ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஓ-எ)

## ஹெலியை கண்டு ஒதுங்கியவர் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், நவ. 8

ஹெலிக்கொப்டரைக் கண்டு ஒதுங்கியவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை இழந்தார்.

மண்டைதீவு கடற்கரையில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் மண்டைதீவைச்சேர்ந்த பகவத்சிங் திருவருள் செல்வன் (வயது15) என்பவரே காலை இழந்தவராவார். (இ-15)



### மா தாராளம்!

குடாநாட்டில் உள்ள பாவனையாளர்களுக்கு தாராளமாக மா கிடைக்கும் சாத்தியம் தென்படுகிறது.

இங்குள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்குத் தேவையான மாவை அவற்றுக்கு நேரடியாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று கப்பலில் கொண்டு வரப்படும் மா பாவனையாளர்களுக்கு எதுவித கட்டுப்பாடுமின்றி தாராளமான முறையில் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஓ-3]

## இந்திய ஜனாதிபதியின் அடுத்த நடவடிக்கை என்ன?

புதுடில்லி, நவ. 8

வி.பி. சிங்கின் தேசிய முன்னணி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்றதை தொடர்ந்து ஜனாதிபதி வெங்கட்ராமன் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பார் என்பது குறித்து நேற்றிரவு பலவித ஹேஸ்யங்கள் தெரிவிக்கப்பட்டன

★ மதம் மற்றும் பிரச்சினைகளினால் நாடு மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறது. ஆகவே புதிய பொதுத்தேர்தல் எதையும் உடனடியாக நடத்துவதை ஜனாதிபதி விரும்பவில்லை என சில செய்தி ஏஜென்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆகையினால் இந்திராகாங்

[4ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு மேலதிகமாக அலவன்ஸ்

கொழும்பு, நவ. 8

இம்மாதம் முதல், சகல அரசு மற்றும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் மாதாந்தம் மேலதிக அலவன்ஸ் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜேதுங்க இதனை நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

மாதம் 2000 ரூபாவும் அதற்கு குறைவாகவும் சம்பளம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்த நிறுத்தம் எதனையும் புலிகள் எதிர்பார்க்கவில்லை

### தளபதி கரிகாலன் நேரில் விளக்கம்

கொழும்பு, நவ. 8

யுத்தநிறுத்தம் எதனையும் நாம் எதிர்பார்த்திருக்கவில்லை.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் அரசாங்கம் வெற்றியீட்டவும் இல்லை; நாம் தோல்வி அடையவும் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை தளபதி கரிகாலன்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றின் செய்தியாளர்கள் மட்டக்களப்பில் வைத்துப் பேட்டி கண்டனர்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தளபதிகரிகாலனைச்சந்திப்பதில் எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை என்றும்—

மட்டக்களப்பில் இருந்து இராணுவச் சோதனை நிலையம் ஒன்றைத் தாண்டி இலுப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரி நாளை முதல் மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், நவ 8

மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கி வந்த யாழ்-போதனா ஆஸ்பத்திரி நாளை முதல் மீண்டும் யாழ்ப்பாணத்தில்– பழைய இடத்தில்- இயங்கவிருக்கிறது.

நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் ஊழியர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இந்த விடயம் குறித்து முடிவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒருசோடி வான்கோழியும், ஒரு ஆண் வான் கோழியும் (Turkey) விற்பனைக்குண்டு. தொடர்பு N. N. மரியாம் பிள்ளை, 45, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (14705)

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (14550)

புதிய National Colour T.V TC-2186 MR, Sumeet Kitchen Machine SP - 16 Electronic தீர்வையற்ற [Duty Free] விலைக்கே விற்பனைக்குண்டு. தொடர்பு Paradise Shop, வேம்படி, வல்வெட்டித்துறை (14643)

### விண்ணப்பப் படிவங்கள்

சுய விருப்பத்தில் இளைப்பாறும் ஊழியர்களுக்கான படிவம், விபரம் விலை ரூபா 1/- விற்பனையாகின்றது. பெறவிரும்புவோர்நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். விபரங்களையும் பார்வையிடலாம். தொடர்பு நாயகபாலன் ஸ்ரோர்ஸ். மானிப்பாய். (சி/5385)

### விண்ணப்பப் படிவங்கள்

மொறட்டுவை பல்கலைக் கழக அனுமதிக்கான படிவம் யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கான படிவம், திறமை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் இலங்கை அதிபர்கள் சேவை தரம் II இற்கான படிவம் யாவற்றிற்கும் நாயக பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் (சி/5386)

### மணப்பெண்கள் தேவை

கனடா, ஜேர்மனியில் வேலை செய்யும் யாழ்ப்பாண இந்து ஏராளரின் (Pallar) மணமக்களுக்கு 20—27 வயதுக்கிடைப்பட்ட மணப் பெண்களும், 39 வயது யாழ்ப்பாண இந்துவேளாள சிவில் எஞ்சினியருக்கு மணப்பெண்ணும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (14704)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Rhodesian Ridgdack 2 மாத குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு நல்லூர் பாம்சென்றர் 19 முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தி நல்லூர். (14647)

### நீம் சுகாதார தூபம்

நுளம்புத் தொல்லையில் இருந்து விடுபட நீம் சுகாதார தூபம் பைக்கெற் ஒன்று ரூபா 1/- மட்டுமே.

திருநெல்வேலியிலும் இணுவிலிலும் அண்ணா கோப்பிக் கடையில் கிடைக்கிறது.

மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி/5387)

### மணமகள்தேவை

அவுஸ்திரேலியாவிலுள்ள வேளாள றோமன் கத்தோலிக்க 38 வயதுடையவருக்குப் படித்த ஆங்கில அறிவுடைய அழகுள்ள மணமகள் தேவை அவுஸ்திரேலியாவிலுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். C/o 153 உதயன் யாழ்ப்பாணம். (14646)

### கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகட்கு கவரிட்டுக் கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ் இந்து மகளிர் சந்திக்கு அண்மையில் (சி 5355)

### இராசா டீசல் என்ஜினியேர்ஸ்

திங்கட்கிழமை 5 - 11 - 90 முதல் பழைய இடமாகிய 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம். (14625)

### வைத்திய சேவை

Dr. C. C. S ராஜன் கிருஷ்ணா வைத்திய நிலையம், மார்க்கட்சந்தி, நாவாந்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. (14638)

## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

G.C.E. O/L, A/L Science & Commerce
SPOKEN ENGLISH
SHORTHAND TYPING
(இரு மொழிகள் மூலமும்)

### A/L Commerce

தமிழ் — N. குழந்தைவேலு
பொருளியல் — A. குமாரவேலு
கணக்கியல் — குணேந்திரன்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
வர்த்தகம் — பிரபல ஆசிரியர்

**வகுப்புகள் ஆரம்பம்:**
**08 - 11 - 1990**

பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு. (சி-5383)

### அல்டி (ALDI)

நவீன கைக்கடிகாரங்கள் சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள் நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும். உங்கள் மணிக்கூடுகளை நல்ல முறையில் திருத்திக் கொள்ளவும் யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம் 'அல்டி' 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ஏற்கனவே மணிக்கூடு திருத்தத் தந்தவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். யாழ் நகரில் 'அல்டி' ஓர் நம்பிக்கையான ஸ்தாபனம். [சி.5379]

## கலை வர்த்தகக் கல்லூரி

**C. C. A., A/L 90, 91, 92**

### இடமாற்றம்

நல்லூர் ஃவமன் றோட்டில் உள்ள எஸ். பி ஐயர் (ஆங்கில ஆசிரியர்) வீட்டில் வகுப்புக்கள் யாவும் சனிக்கிழமை (10-11-90இல்) மு. ப. 8 00 மணிக்கு வழமையான ஆசிரியர் குழுவினால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க. பொ. த. (உயர் தரம்) 90, 91, 92 மாணவர்கள் யாவரும் சமுகமளிக்கவும்.

[சி-5382]

## சாவகச்சேரி பிரதேசசபை
# 1991 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 1991 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 03 - 12 - 90 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் அந்தந்த உப-பணிமனைகளில் 30 - 11 - 90 ஆம் திகதி பிற்பகல் 3 00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்'' என்ற முகவரிக்கும். இணைப் பிரதியை ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்னதுக்கான கேள்வியென எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலம் 03 - 12 - 90 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப்பணிமனையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும். கேள்விப் பத்திரங்கள் 05 - 12 - 90 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபைப் பணிமனையில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் கொடுக்கலாம்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் கொண்டு வருதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களைப் பெறத் தகுதியற்றவர் எனக் கருதப்படும் ஒருவருக்கு விசேட ஆணையாளரால் கேள்விப் பத்திரங்கள் வழங்காது விடப்படலாம். 1990 ஆம் ஆண்டு குத்தகைப் பணத்தைச் செலுத்தாதவர்களுக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது தெரிவு செய்யப்பட்ட கேள்விக் காரர் மாத்திரம் குத்தகையை ஏற்று நடாத்த அனுமதிக்கப்படுவர். ஆள்மாறாட்டம் எதுவும் செய்யப்படுமிடத்து குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. இதுசம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபைப் பணிமனையில் அல்லது உப-பணிமனைகளில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பிற்போடவோ இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

### அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **கச்சாய் உப பணிமனை** | | | |
| 1. கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 22750.00 | 100.00 | 50.00 |
| 2. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 3000 00 | 100.00 | 50 00 |
| **மிருசுவில் உப-பணிமனை** | | | |
| 1. மிருசுவில் பொதுச் சந்தை | 2500.00 | 100.00 | 25 00 |
| 2. மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 8500 00 | 100 00 | 25.00 |
| 3. எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 200.00 | 25 00 | 10 00 |
| 4. மிருசுவில் வடக்குச் சந்தை | 150.00 | 25.00 | 10.00 |
| 5. மிருசுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (தற்காலிகக் கடை குத்தகைக்காரரால்-அமைக்கப்பட வேண்டும்) | 1500.00 | 100 00 | 25.00 |
| **வரணி உப-பணிமனை** | | | |
| 1. வரணி பொதுச்சந்தை | 15000.00 | 100.00 | 25.00 |
| 2. வரணி மாட்டிறைச்சிக்கடை | 3500.00 | 100 00 | 25.00 |
| 3. வரணி ஆட்டிறைச்சிக்கடை (தற்காலிகக்கடைக் குத்தகைகாரரால்-அமைக்க வே ம்) | 1500 00 | 100.00 | 25 00 |
| **கைதடி உப பணிமனை** | | | |
| 1. கைதடி பொதுச்சந்தை | 2000.00 | 50.00 | 25.00 |
| 2. கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 16000 00 | 150 00 | 100.00 |
| 3 கைதடி மாட்டிறைச்சிக்கடை | 5500.00 | 100 00 | 50.00 |
| 4. கைதடி சந்தைக்கடைகள் (2) | 35000.00 (இவ் வொன்றும்) | 200.00 | 50.00 |
| **நாவற்குழி உப பணிமனை** | | | |
| 1. நாவற்குழி ஆட்டிறைச்சிக்கடை (தற்காலிக கடைக்குத்தகைக்காரரால்-அமைக்க வே. ம்) | 1500.00 | 100.00 | 25.00 |
| 2 நாவற்குழி மாட்டிறைச்சிக்கடை | 5000.00 | 100 00 | 25 00 |

பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்,

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 31 - 10 - 90

[சி-5384]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி மீண்டும் பழைய இடத்தில் - யாழ் நகரில் - இயங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது இது, யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி, வடமாகாணம் முழுவதிலும் வாழும் மக்களுக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

யாழ். ஆஸ்பத்திரி தனது சொந்த இடத்தில் இயங்க முடியாததால் ஏற்பட்ட கஷ்டங்களும், அவலங்களும் அவச்சாவுகளும் எல்லோருக்கும் தெரிந்தவை.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி போன்று சிகிச்சை வசதிகளும், பிற வசதிகளும் கொண்டபெரிய ஆஸ்பத்திரி எதுவும் வடக்கு மாகாணத்தில் வேறு எதுவும் இல்லை யுத்த காலத்தில் அதன் பூரண சேவை இல்லாமற் செய்யப்பட்டது சமூகத்தில் பல பாதகமான விளைவுகளை உண்டாக்கியது.

இவற்றைச் சுட்டிக்காட்டி யாழ்.ஆஸ்பத்திரிப்பகுதியை யுத்த சூன்ய பிரதேசமாக்கி, அதனைச் சொந்த இடத்திலேயே இயங்க வகை செய்யுமாறு இப்பத்தியில் பல தடவைகள் இடித்துரைத்திருந்தோம்.

தமது இராணுவத் திட்டங்களை அமுல்படுத்தும் உள்எண்ணத்துடன், யாழ். ஆஸ்பத்திரி இயங்குவதை வேண்டுமென்றே தடுத்தும், தாமதித்தும் வந்தனர் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் அவரது கூட்டுப் படைத் தலைமையலுவலக அதிகாரிகளும். எனினும் யாழ் கோட்டையைப் பறிகொடுத்ததின் பின்னர் இப்போது, நிலைமாறி மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொள்ள முயல்கின்றனர்.

ஆஸ்பத்திரிகள் மீது விமானத் தாக்குதல் நடத்திய வேளை, வடபகுதித் தமிழர்கள் மீது ஏற்படாத அக்கறை, அவர்களுக்கு இப்போது வந்திருப்பது ஆச்சரியத்துக்கு உரியதே சர்வதேசப் பிரசாரத்துக்கு இதனைப் பாவிக்கலாம் என்பதுதான் உள்ளாந்தரம் எனினும் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்க இருப்பது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே.

ஆஸ்பத்திரியின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுள்ள செஞ்சிலுவைக்குழு சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை அறிவித்துள்ளது. ஆஸ்பத்திரியைச் சுற்றிவர நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்புப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை முற்றாகத் தடைசெய்துள்ளது.

மக்கள் கூடும் இடங்களான ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், சந்தைகள் மீது விமானத் தாக்குதல் நடத்தும் அரசாங்கம், செஞ்சிலுவை விதிகளை மீறாதிருந்தால் அதுவே போதுமானதாகும்.

அதனை உறுதி செய்து கொள்வதில்தான் செஞ்சிலுவைச் சங்கத்தின் கெட்டித்தனம் தங்கியுள்ளது. செய்வதைச் செய்துவிட்டு, பின்னர் ஒரு நொண்டிச் சாட்டைச் சொல்லிச் சமாளித்து நழுவும் அரசின் சுபாவம், செஞ்சிலுவைக் குழுவின் அதிகாரிகளுக்கு இதுவரை புரிந்திருக்கும் என்று நம்புகிறோம்.

### மின்சார சபையின் வட பிராந்திய அலுவலகப்:

# வவுனியா - மன்னார் பிரிவுகளை வடக்கிலிருந்து பிரிக்க முயற்சியா?

யாழ்ப்பாணம், நவ. 8

மின்சாரசபையின் வடபிராந்திய அலுவலகத்தில் இருந்து வவுனியாவையும், மன்னாரையும் பிரித்து எடுக்க மறைமுக முயற்சி மேற்கொள்ளப் படுகிறதா?

மின்சார சபையின் வட பிராந்திய அலுவலகத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மின்சாரப் பொறியியலாளர் பிரிவுகள் இயங்கி வந்தன.

கடந்த ஜூன் மாதத்துக்கு பின்னர் இடம்பெற்ற சம்பவங்களால் இடம்பெயர்ந்த வவுனியா, மன்னார் பொறியியலாளர் அலுவலக ஊழியர்கள் இன்னும் வேலைக்கு திரும்பவில்லை.

இந்த நிலையைப் பயன்படுத்தி வவுனியா மின்சாரப் பொறியியலாளர் பிரிவு மதவாச்சி பொறியியலாளர் பிரிவால் பொறுப்பேற்கப் பட்டு மின்விநியோக வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

இது ஒரு தற்காலிக ஏற்பாடு என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் நிரந்தரமாக இணைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் மின்சாரசபை ஊழியர்கள் மத்தியில் நிலவுகிறது.

அதேபோன்று மன்னார் மின்பொறியியலாளர் பிரிவு அலுவலகத்தின் வேலைகளையும் அநுராதபுரம் மின்சார பொறியியலாளர் பிரிவு பொறுப்பேற்க முயற்சிமேற் கொண்டுள்ளது என்றும் அறிய வருகிறது. (இ-3)

## தொலைக்கல்வி நிலைய பெறுபேற்று பத்திரம்

தொலைக்கல்வி நிலைய ஆசிரிய மாணவர்களின் பெறுபேற்றுப் பத்திரம்(1987 89) எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 30 மணி அளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். கலந்துரையாடலில் வைத்து வழங்கப்படும்.

கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இதனை வழங்குவார்.

1989-91 ஆம் ஆண்டு ஆசிரியமாணவர்களும் 1990-92 ஆம் ஆண்டு ஆசிரியப் பயிலுநர்களும் கூட்டத்தில் கலந்து தமது நெறிக்கற்கைகள் பற்றிய கலந்துரையாடல்களில் பங்கு பெற்றுமாறு சிரேஷ்டவிரிவுரையாளர் திரு. எம்.எஸ் அலெக்சாண்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## சாட்டியில் தற்காலிக சந்தை

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் தங்கள் அன்றாட பொருள்களை வாங்குவதற்கு மண்கும்பான், சாட்டிபள்ளிவாசல் பகுதிக்குச் செல்ல வேண்டி உள்ளது.

தற்காலிகமான சந்தை ஒன்று மண்கும்பான் சாட்டிப் பகுதியில் இயங்கி வருகின்றது.

அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் இது வரை திறக்கப்படவில்லை (இ - 88)

## நல்லூரில்மேஜர் கணேஷ்வீதி திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 8

முன்னாள் மூதூர் பிரதேசத்தளபதி மேஜர் கணேஷின் 4 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நல்லூர் சிவன் வீதி மேஜர் கணேஷ் வீதி என பெயர் மாற்றம் செய்து வைக்கப்பட்டது. வீதியை மறைந்த போராளி ஒருவரின் தந்தையார் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், நல்லூர் பிரதேசப்பொறுப்பாளர் திரு. மோகன் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து நல்லூர் சிவன் ஆலயத்தில் மேஜர் கணேஷின் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

அதேசமயம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மேஜர் கணேஷின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரின் உருவப்படம் கொண்ட பந்தல்கள் அமைக்கப்பட்டு, தோரணங்கள் கட்டப்பட்டு புரட்சி கீதங்கள் இசைக்கப்பட்டன. (இ-6)

## குவைத் பிரசைகளை ஈராக் பிரசைகளாக பதிய உத்தரவு

குவைத்தில் உள்ள சகல குவைத் பிரசைகளும் தங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஈராக்கிய பிரசைகள் என்று பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி சதாம் ஹுசேன் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த உத்தரவுக்குப் பணிய மறுக்கும் குவைத் பிரசைகள் அனைவரும் சட்டவிரோத குடியேற்றக்காரர்களாகக் கருதப்படுவர் என்றும் ஜனாதிபதி எச்சரித்திருக்கின்றார்.

ஈராக்கின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, குவைத் நாட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# சேதமடைந்த அரண்களுக்குள்ளே நின்றும் தீரத்துடன் போராடிய விடுதலைப் புலிகள்

## (X)

மண்டைதீவிலிருந்து பண்ணைத் தாம்போதி வழியாக முன்னேற முடியாத படையினர் பண்ணைக் குடாக் கடல் பகுதி வழியாக முன்னேறத் திட்டமிட்டனர்.

குடாக் கடலையும் கோட்டையின் பின்புற (தென் மேற்குப் பகுதி) சுவரையும் பிரித்து நின்றது சுமார் ஐம்பது யார் குறுக்களவுள்ள ஒரு நீண்ட நிலப்பரப்பே.

இந்த நிலப்பரப்பினூடாகவே கடற்கரை வீதி செல்கிறது.

இந்தப்பகுதியில் புலிகளின் காவல் அரண்கள் ஏதும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

அது தவிர நட்சத்திரத்தின் ஐந்து முனைகள் போன்ற வடிவில் அமைந்த கோட்டையின் ஐந்து முனைச் சுவர்களில் இரண்டு - கோட்டையிலிருந்து வெளிநீட்டமாக வந்து - கடற்கரை வீதி நிலப் பகுதியை புலிகளின் மறைய காவல் அரண்களில் இருந்து பிரித்துக் கொண்டிருந்தது.

கோட்டையின் இரு முனைகளுக்கும் இடையே, கோட்டைச் சுவரை அண்டி (கோட்டைச் சுவர் பக்கமாக) உள் வளைந்து இந்த நிலப்பரப்புக் காணப்படுகிறது.

### கண்காணிப்பது கஷ்டம்

பண்ணைச் சந்தியிலும் மறுபுறத்தில் பொலீஸ் நிலையக் கட்டடத்திலும் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் காவல் அரண்களிலிருந்து இந்த நிலப்பரப்பைப் பார்க்கமுடியாது. [illegible] யின் ஐந்து முனை [illegible] இருமுனைகள் அதனைமறைத்துக் கொண்டிருந்தன.

எனவே இந்த நிலப்பரப்பில் இடம்பெறும் சுயாதீன நடமாட்டத்தை விடுதலைப் புலிகள் தமது காவல் அரண்களில் இருந்து கண்காணித்து கட்டுப்படுத்துவது என்பது கஷ்டமானதாகவே இருந்திருக்கும்.

இந்த நிலப்பரப்பை அடைவதற்கு முன்னர், குடாக்கடலில் வைத்து படையினரின் நகர்வை கட்டுப்படுத்தினால் அன்றி, சிறிய நிலப்பரப்பில் படைகளைக் கட்டுப்படுத்த வசதியிருந்திருக்காது.

**கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை**

### செப்டெம்பர் 13 இல்

செப்டெம்பர் 13ஆம் திகதி விடிகாலையில் சினச்சகடை மற்றும் விமானங்களைக் கொண்டு யாழ் நகர் அதிரும் விதத்தில் குண்டுகளால் பொழியச் செய்துவிட்டு, படையினர் மண்டைதீவிலிருந்து குடாக்கடல் வழியே கோட்டை நோக்கி சிறிய பீரங்கிப் படகுகளில் முன்னேறத் தொடங்கினர்.

குடாக்கடலை நோக்கி இருந்த விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை நோக்கி பீரங்கிப் படகுகளில் இருந்தும், மண்டைதீவு தற்காலிக முகாமில் இருந்தும், கோட்டைக்குள் இருந்தும். விமானங்கள், ஹெலிக்கொப்டர்களிலிருந்தும் பீரங்கி மற்றும் அகோர ஷெல்தாக்குதல்கள் நடத்திய வண்ணம் குடாக் [illegible] கணத்துக்கு ஒரு ஷெல் செக்கனுக்கு ஒரு பீரங்கி என்று வெடித்த குண்டுகளினால் யாழ். நகரம் அதிர்ந்தது. புலிகளின் காவல் அரண்களும் சேதமுற்றன.

ஆனால் அந்தக் காவல் அரண்களுக்குள் இருந்து கொண்டே குடாச் கடலில் நகரும் படையினரை நோக்கி அசுரவேகத் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள் புலிகள்.

சேதமுற்றுக்கிடந்த புலிகளின் காவல் அரண்களைப் பார்வையிட்டேன். இத்தனை அழிவுகள், உடைவுகள், சிதைவுகளுக்கு மத்தியில் நின்றுகொண்டு, எவ்வளவு தீரத்துடன் படையினரை மறித்து வேங்கைகள் போரிட்டிருக்கிறார்கள்!

குடாக்கடலில் படையினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் குடாக் கடலைப் பார்த்தேன். அசைவற்று, அடையாளமற்றுக் காணப்பட்டது. இந்தக் கடலில்

**- கூர்விழியான் -**

தானா பல பீரங்கிப்படகுகள் சேதமுற்று, பல சிப்பாய்களின் உயிர்கள் பலியாகின?

### எப்படிப் புகுந்திருப்பர்?

கடும் எதிர்ப்புக்கு மத்தியில் குடாக்கடலையும் பின்னர் சிறிய நிலப்பரப்பையும் கடந்த படையினரின் ஓர் அணி கோட்டைக்குள் ஒருவாறு புகுந்துகொண்டது.

கோட்டைக்குள் புகுந்த அணியில் எத்தனை சிப்பாய்கள் இடம்பெற்றிருந்தனர்? அவர்கள் கோட்டை பின்புற வாசல் வழியாக உள்ளே புகுந்தார்களா? அல்லது கோட்டைக்கு உள்ளேயிருந்த சிப்பாய்களினதும் ஏணிகள் போன்றவற்றினதும் உதவியுடன் கோட்டை மதிலை ஏறிக் கடந்தார்களா?

— இவை போன்ற கேள்விகளுக்கு பதிலைக் கண்டு பிடிக்கக் கூடிய தடயங்களைக் கோட்டையில் காணமுடியவில்லை.

கோட்டைப் பின்புற வாசலை மூடிக் கட்டியிருந்த சிமெந்துச் சுவர் உடைக்கப்பட்டிருந்தது.

செப்டெம்பர் 13 ஆம் திகதி கோட்டைக்குள் புகுந்த சிப்பாய்களுக்கு வழியமைக்கவோ அல்லது செப்டெம்பர் 26 ஆம் திகதி தப்பிச் செல்வதற்காகவோ இந்த சிமெந்துச் சுவரைப் படையினர் உடைத்திருக்கக்கூடும்.

அந்தப் பின்புற வாசலில் நின்று குடாக்கடலைப் பார்த்தேன்.

நீண்ட தேடாவளையக் கயிறு போன்ற இழை தும்புக் கயிறு அல்லது இரும்புக் கேபிளாக இருக்கக்கூடும். குடாக் கடல் கரையிலிருந்து கடலின் நீர்மட்டத்துக்கு மேலாக கடலுக்குள் நீண்ட தூரம் சென்றதை அவதானித்தேன்.

இந்தக் கேபிள் அல்லது கயிறு எதற்குப் பாவிக்கப்பட்டிருக்கும்? பல ஊகங்களையும், சாத்தியங்களையும் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச, கூட்டுத்தாபன, சபை ஊழியர் சம்பளம் கிடைக்கும்

## கொழும்பில் அரச அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், நவ 8
யாழ் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக வேதனம் கிடைக்காமல் துன்பப்படும் அரச, கூட்டுத்தாபன, சபைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சம்பளம் கிடைப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இந்த ஊழியர்களின் நிலை குறித்து யாழ் அரச அதிபர் கொழும்பில் சம்பந்தப்பட்ட உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

நேற்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் சம்பள விடயமாக அரச அதிபர் பேச்சு நடத்தினார் என்றும் தெரிய வருகிறது.

எதிர் வரும் 15 ஆம் திகதி அரச அதிபர் யாழ்ப்பாணம் திரும்பும் போது, சம்பந்தப்பட்ட ஊழியர்களின் சம்பளத்தை பணமாகஎடுத்து வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-3)

## காத்தான்குடி: ஊர்காவலர் பலி

கொழும்பு, நவ. 8
காத்தான்குடியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (ஒ)

## யுத்த நிறுத்தம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படிச் சேனை வீதிக்குத் திரும்பியதும் எங்கும் விடுதலைப் புலிகள் சுதந்திரமாகத் திரிவதைக் காண முடிந்ததாகவும்-

தாங்கள் மட்டக்களப்பில் இருந்து சென்ற காரிலேயே கரிகாலனின் அலுவலகத்தைச் சென்றடைந்ததாகவும் — செய்தியாளர்கள் தமது கட்டுரையில் குறிப்பிடுகிறார்கள்.

களபதி கரிகாலன் அவர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தின் ஆரம்பத்தில் எம்மிடம் சரணடைந்த 700 பொலிஸ்காரர்களையும் நாம் கொன்றதாகக் கூறுவது தவறாகும்.

நாம் 40 பொலிஸ்காரர்களையே கைது செய்தோம். அவர்களும் பின்னர் தப்பிப் போய் விட்டனர். மற்றவர்கள் சண்டையிலேயே இறந்தார்கள் - என்றார்.

## இந்திய ஜனாதிபதியின்---

கிரஸின் ஆதரவைப் பெற்றிருக்கும் சந்திரசேகரை அடுத்த ஆட்சியை அமைக்கும்படி ஜனாதிபதி அழைக்கக் கூடும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் -

529 உறுப்பினர்களை தற்போது கொண்டிருக்கும் நாடாளுமன்றத்தில் சுமார் 60 உறுப்பினர்களைமட்டுமே கொண்ட குழு ஒன்றுக்குத் தலைவராக இருக்கும் சந்திரசேகரினால்நிலையான ஆட்சி ஒன்றை அமைக்க முடியுமா? அதுவும் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையில் அத்தகைய அரசு ஒன்றை அனுமதிக்கலாமா? - இப்படி ஜனாதிபதி கருதக்கூடும் என்றும் வேறு சில அவதானிகள் தெரிவித்தனர்.

இதனால்—

நாடாளுமன்றில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் காங்கிரஸ் கட்சியின் தலைவரை அரசு அமைக்கும்படி ஜனாதிபதி அழைக்கக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி அத்தகைய முடிவை விரும்பாவிட்டால் அல்லது—

புதிய சிறுபான்மை அரசு ஒன்றை அமைக்க ராஜீவ் விரும்பாவிட்டால்—

ஜனாதிபதி தற்போதைய நாடாளுமன்றைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் தேர்தல் முடிந்து புதிய அரசு அமைக்கப்படும் வரை வி.பி. சிங்கையே காபந்து பிரதமராக இருக்கும்படி ஜனாதிபதி கேட்டுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். [உ]


## அறிவித்தல்

### சம்பந்தன் வைத்திய நிலையம்

இலங்கை வங்கிக்கு அருகாமையில் உள்ளசம்பந்தன் வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம் (574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) மீண்டும் 9 - 11 - 90 தொடக்கம் வழமைபோல் நடைபெறும்.

[14708] - முகாமையாளர்.


## ஆஸ்பத்திரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டது.

நாளை காலை ஆறுமணி முதல் வெளிநோயாளர் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு உட்பட சகல வைத்தியப் பிரிவுகளும் இயங்கும்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சகல கிளினிக்குகளும் இயங்கத் தொடங்கும். [உ-3-15]

## அரச ஊழியர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவோருக்கு மாதம் முந்நூறு ரூபாவும்-

மாதம் 2 ஆயிரம் ரூபாவுக்கு மேலும் 3 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாகவும் சம்பளம் பெறுவோருக்கு மாதம் இருநூறு ரூபாவும் மேலதிக மாதாந்த அலவன்ஸாக வழங்கப்படும்.

ஓய்வூதியம் பெறுபவர்களும் இந்த மேலதிக மாதாந்த அலவன்ஸ் பெறுவதற்கு உரித்துடையவர்களாகிறார்கள்.

கூட்டுத்தாபனங்கள், மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரும் இந்த மேலதிக மாதாந்த அலவன்ஸுகளை தமது ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதமர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை உயர்வால் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைச் சமாளிக்கும் முகமாகவே, இந்தமேலதிக மாதாந்த அலவன்ஸ் வழங்கப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார். (ஒ-எ)

## வி.பி. சிங் அரசு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு முக்கியம் என்று தீர்மானித்தோம். அதனால் தான் அரசுக்கு இந்த நிலை ஏற்பட்டது.

எனவே இந்த நிலையில் மனசாட்சிப்படி வாக்களிக்கும்படி எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சியைக் கவிழ்க்க முயலும் இந்திரா காங்கிரஸினர் புதிய ஆட்சியை அமைக்க முன்வரலாமே?'' – இவ்வாறு சிங் தமது உரையில் கேள்வி எழுப்பினார்.

முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ்காந்தி, முன்னாள் துணைப்பிரதமர் தேவிலால், சந்திரசேகர் போன்றோர் வி. பி. சிங் அரசைக் கடுமையாகத் தாக்கி உரையாற்றினார்கள்.

பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல். கே. அத்வானியும் வி. பி. சிங் அரசை கடுமையாகத் தாக்கினர்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் சிங் [illegible] ஆதரித்தன. [உ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குருசுமுத்து அன்னம்மா

நாரந்தனை மேற்கைச் சேர்ந்த திருமதி குருசுமுத்து அன்னம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற குருசுமுத்துவின் அன்பு மனைவியும் காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை (U D. A.,கொழும்பு), திருமதி மரிஸ்ரெல்லா சிறில் (ஆசிரியை நாரந்தனை றோ. க. மகா வித்தியாலயம்), லீனஸ் (லக்ஸ்மீ ரெக்ஸ்ரைல்ஸ்-நீர்கொழும்பு), ராசேந்திரம் (டென்மார்க்), திருமதி புஸ்பம் செல்வராஜன் (ஆசிரியை - கரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலயம்), திருமதி ஜேற்றூட் கனகலிங்கம் (இளைப்பாறிய விகிதர்), பேணாட் (ஜேர்மனி), காலம் சென்ற யசிந்தா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாரந்தனை சம்பேதுருவானவர் சேமக்காலைக்கு 8-11-90 (இன்று) வியாழக்கிழமை எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை. [14706]

## திருமதி தியாகராசா சுபத்திராதேவி

திருமதி தியாகராசா சுபத்திராதேவி காலமானார். அன்னார் திருநெல்வேலி - கேணியடியைச் சேர்ந்த திரு. திருமதி சுப்பிரமணியத்தின் அன்பு மகளும், தியாகராசாவின் [உரிமையாளர், S. T. R. & Son மாஸ் கடை, திருநெல்வேலிச் சந்தி] அன்பு மனைவியும், தினேஸ், தர்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சு. இராமகிருஷ்ணனின் அன்புச் சகோதரியும், க. மகேந்திரன் [அவுஸ்திரேலியா], க. ஜெயராம் [U. K.] ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், வளாக வீதியில் வசித்து காலம்சென்ற சரவணமுத்து - திருமதி சரவணமுத்துவின் மருமகளும், யோகராஜா, சண்முகராஜா, விவேகானந்தராஜா, திருமதி ரங்கநாதன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-11-90 வியாழக்கிழமை [இன்று] பிற்பகல் 1 மணியளவில் ஆடியபாதம் வீதி, கேணியடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தியாகராசா [கணவன்]

கேணியடி,
திருநெல்வேலி. [14282]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஷ்ணபிள்ளை பசுபதி

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை பசுபதி காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி கந்தப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும்; காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (Chief Trains Controller), பாலகிட்ணர் (Judge Court of-Appeal), காலஞ்சென்ற கோபாலரட்ணம் (செயலாளர், வடகிழக்கு மாகாண சபை), காலஞ்சென்ற ராஜகோபால் (வைத்திய கலாநிதி), திருமதி சுபத்திரா தேவி இராமநாதன் (ஆசிரியர் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி) ரட்ணகோபால் (Engineer Australia), திருமதி ருக்மணிதேவி ஞானேஸ்வரன் (Zimbabwe) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி லஷ்மிதேவி பாலகிட்ணர், திருமதி விக்னேஸ்வரி கோபாலரட்ணம், திருமதி செல்வராணி ராஜகோபால் (U K), காலஞ்சென்ற இராமநாதன் (Chief Police Inspector), திருமதி சந்தானபூபதி ரட்ணகோபால் (Australia), திரு. ஞானேஸ்வரன் (Engineer Zimbabwe) ஆகியோரின் அன்பு மாமியும்; காலஞ்சென்ற திரு பொன்னம்பலம் (Post master) அவர்களின் அன்புச் சகோதரியும், ஆனந்தகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன், திருமதி மீரா சசிகணேசன் தேவகி, திருமதி யசோதா யோகேந்திரா, திருமதி ராதா அருந்தவநாதன், திருமதி கீதாஞ்சலி ஜெயரட்ணம், சஞ்சீவன், திருமதி உமா புலேந்திரன், ராம்ஜீவன், ராஜீவ், சஞ்ஜீவ், கோகிலன், சியாமளன், மதுரன் ஆகியோரின் அருமைப் பேத்தியும் அமுதா, ஜனகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 8-11-90 முற்பகல் பத்து மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
து. யோகேந்திரா,
(கொக்குவில்)

No - 30, 8 th Lane,
Colombo - 3. [14283]

## Dr. கந்தையா தருமலிங்கம்

சுழிபுரத்தைச் சேர்ந்த Dr. K. தருமலிங்கம் 14 - 9 - 90 இல் London இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிதம்பரம் தம்பதிகளின் மகனும் விஜயலஷ்மியின் (U. K) கணவரும், ரஞ்சித்குமார் (U. K.), ராஜ்குமாரின் (U. K) தந்தையும், காலஞ்சென்ற பெரியதம்பி (Deputy Director Of Irrigation) திருமதி மாதிராதேவி பெரியதம்பியின் மருமகனும், காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை கந்தையா, திருமதி செல்லம்மா கந்தையா, கதிரவேலு (Malaysia) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற திருமதி பொன்னம்பலம், காலஞ்சென்ற திருமதி தம்பிப்பிள்ளை, திருமதி அம்பிகைபாகர் (Malaysia) ஆகியோரின் மருமகனும், சிவானந்தன் (U. S. A), திருமதி நாகேஸ்வரி நடராசா (Australia), திருமதி புவனேஸ்வரி செல்வக்காராளன், திருமதி வள்ளிநாயகி மகேஸ்வரன், காலஞ்சென்ற மகாலிங்கம், சிவதாஸன் (Singapore), சிவநேசன், திருமதி சிவஞானவதியார் ஏரம்பமூர்த்தி, திருமதி சிவயோகவதியார் ஜெயராசசிங்கம் (U. K), திருமதி நீலாதேவி ராஜரெட்ணம், திருமதி சாந்திமணி நாகராசா (Germany), மனோகரன் (U. K.), வீமதேவன் ஆகியோரின் சகோதரரும், ஜீவகன் [U. K.] திருமதி பாலசரஸ்வதி கணேசலிங்கம், திருமதி ஜெயலஷ்மி கனகரட்ணம், செல்வி ராஜலஷ்மி, காலஞ்சென்ற ஜெகதேவன், நாவுக்கரசன் (Norway) ஆகியோரின் மச்சானும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திருமதி மாதிராதேவி பெரியதம்பி.
[மாமி]

[14709]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292 [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 08 - 11 - 1990 இல் அ[illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org